DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | சரவணபாபு |
| Father's Name | வடிவேல் |
| Village | செட்டியப்பனூர் |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | ஐடி கம்பெனி |
| Age | 44 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **04.06.2025**

O.S.No. 79 /2017 பி.வா.சா.2

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது முதல் விசாரணையில் மாணிக்க முதலியாரின் ஆண்பிள்ளைகள் 4 நபர்களுக்கும் இடையே வீட்டு மனைகள் தனித்தனி சுவாதீனத்தில் இருந்து வந்தது என்றால் சரிதான், அந்த பாகப்பிரிவினை கூர்சீட்டில் C அட்டவணை சொத்தில் நான் எந்த பகுதியில் இருந்து வருகிறேன் என்றால் தென்னை மரங்கள் இருக்கும் தோராயமாக 69 சென்ட் நிலத்தில் இருந்து வருகிறேன்.

எனது பெரியப்பா முனிரத்தினம் என்பவருக்கு கூர்சீட்டில் வந்த சொத்தை தன்னுடைய மனைவி பெயருக்கு எழுதி வைத்துவிட்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

எனது முதன்மை விசாரணையில் வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.39/2009 வழக்குரை நகலை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. வாதி தேவகியும் அவரது கணவரும் அந்த வழக்கில் என்ன பதிலுரை தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

அந்த வழக்கில் எந்த சர்வே எண்கள் மற்றும் அதன் விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து வாதி தேவகியின் பெயரில் தான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 38 சான்றாவணங்கள் நகலைப் பெற்று அவற்றை படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. 1–ம் பிரதிவாதியான காலம் சென்ற எனது தந்தை இந்த வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரங்களை நான் பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை. ஒரு சில ஆவணங்கள் மட்டும்தான் பார்த்தேன்.

இந்த வழக்குச் சொத்தில் இன்றளவு வரை பாதிதான் சுவாதின அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றாலும் இந்த வழக்கு பாதிப்பு வருவது போல தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

இந்த வழக்கில் 1–ம் பிரதிவாதியான என்னுடைய தகப்பனார் முதன்மை சாட்சியம் அளித்துவிட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இறந்துவிட்டார். பின்பு அவருடைய சாட்சியத்தை நீக்கறவு செய்வதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

வழக்கு வாதிகோரிய படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Date: 2025.06.04 18:14:36 +0530

District Munsif,

Vaniyambadi.